Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 321/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW 1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | உதயகுமார் |
| Father's Name | – | பழனிச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 3rd May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது மண்ணூரில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 02.03.2019 ம் தேதி நான் எனது வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருக்கும் போது இரவு 07.50-08.00 மணிக்குள் வெங்கடேஸ் என்பவர் என்னை அழைத்து எனது தந்தை பழனிச்சாமிக்கு விபத்து ஏற்பட்டதாக கூறினார். நான் மண்ணூரில் உள்ள கிருஷ்ணசாமி ரெடிமேட் கடைக்கு எதிரில் கிரீன்மெடிக்கல் அருகே எனது தந்தைக்கு விபத்து ஏற்பட்ட இடத்திற்குசென்றேன். எனது தந்தையார் காயம்பட்டு படுக்கவைக்கப்பட்டுஇருந்தார் அவருக்கு தலையில் தோள்பட்டையில் மற்றும்கால்களில்காயம் ஏற்பட்டுஇருந்தது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது தந்தையாரை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். பின்னர் அங்கு முதலுதவி அளித்து விட்டு மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன்பின்னர் மறுநாள் இரவு 12.10 மணியளவில் எனது தந்தையார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்.

பின்னர் மேற்படி சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார்அளித்தேன் தற்போது என்முன் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், அந்த புகார்**அதசா ஆ 1** ஆகும். விபத்து குறித்து நான் விசாரித்த போது எனதுதந்தையார் பாலக்காடு - பொள்ளாச்சி மெயின்ரோட்டில் தென்புற திசையில் அமைந்துள்ள கிருஷ்ணசாமி ரெடிமேட் கடைக்கு முன்பு எனது தந்தையார் சாலையை கடக்க நின்று கொண்டிருந்த போது பாலக்காடு ரோட்டில் மாருதி வேகனார் என்ற நான்கு சக்கர வாகனத்தினை பகவதி கிருஷ்ணன் என்னும் நபர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து தனக்கு முன்னால் வந்து கொண்டிருந்த லாரியை ஓவர் டேக் செய்து ரோட்டின் கரையில் நின்று கொண்டிருந்த எனது தந்தை மீதுமோதி விபத்தை ஏற்படுத்தியதாக கேள்விபட்டேன். ஆஜர் எதிரி தான்மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து எனக்குநேரடியாக எதுவும் தெரியாது. நான் ஓட்டுநர் என்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணத்தை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை எனது தந்தைக்கு 72 வயது ஆகும். எனது அம்மா இருக்கின்றார். சம்பவம் இரவு 07.30 மணிக்கு நடந்ததாக கூறினார்கள். சம்பவ இடத்திற்கு அருகில் மின்விளக்கு உள்ளது. சம்பவ இடம் கடைகள் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான்.

நான் சென்று பார்த்தபோது ரோட்டிற்கு வடபுறம் உள்ள கிரின் மெடிக்கல் கடைக்கு

முன்பாக எனது தந்தையை எடுத்து வைத்திருந்தார்கள் எனது தந்தை விழுந்த இடமும் அதுதான். வெங்கடேஸ் என்பவர் எனது நண்பர் என்றால் சரியல்ல எனது ஊர்க்காரர். நமச்சிவாயம் என்பவர் எனது மாமா என்றால் சரியல்ல பழக்கமானவர். காளிமுத்து. வெங்கடேஸ்குமார்,நமசிவாயம் ஆகிய மூவரும் எனது உறவினர் என்றால் சரியல்ல. மேற்படி மூவரும் காவல் நிலையம் சென்று சம்பவம் குறித்து கூறினோம் என்றால் சரிதான். அங்கு விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

அரவிந்த்சாமி,மோகன்ராஜ் ஆகியோரை போலிசார் விசாரித்தனர் என்றால் சரிதான். அவர்களிடம் கையொப்பம் பெற்றார்களா என்று எனக்கு தெரியாது. எனது தந்தையார் சாலையை தென்புறம் இருந்து வடபுறமாக உள்ள மருந்து கடைக்கு மேற்கிலிருந்து வரும் வாகனத்தை கவனிக்காமல் கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல எனது தந்தை ரோட்டை கடக்கவில்லை.

சாலையில் கிழக்கே சென்ற லாரியின் வாகன எண் குறித்து எனக்குதெரியாது. விபத்து நான்கூறியது போல் நடக்கவில்லை என்றாலும் விபத்தில் இறந்தநபர் எனது தந்தை என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் வயதானவர் என்பதாலும் அவருக்கு கண்பார்வை சரியாக தெரியாத காரணத்தால் தானே சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல எனது தந்தை சாலையை கடக்க வில்லை அவருக்க கண் பார்வை நன்றாக தெரியும்.

எதிரி வாகனத்தை மெதுவாகவும் கவனமாகவும் சாலையின் இடதுபுறமாக ஓட்டிவந்தார்என்றாலும் எதிரியின் மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல. வாகனத்தை வேகமாகதான் ஓட்டி வந்தார்.

**மறுவிசாரணை**

இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B.A.,,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 321/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW 2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | வெங்கடேஸ்குமார் |
| Father's Name | – | சுப்பிரமணியம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 3rd May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது மண்ணூரில் குடியிருந்து கொண்டு நான் சுய தொழில் செய்து வருகிறேன். அசா 1 ஐ எனக்குதெரியும் அவரின் தந்தையார் பெயர் பழனிச்சாமி. கடந்த 02.03.2019 ம் தேதி மண்ணூரில் உள்ள கிருஷ்ணசாமி துணிக்கடை முன்பு இரவு 07.45 மணியளவில் மருந்து வாங்குவதற்கு வந்ததாக மேற்படி பழனிச்சாமி என்னிடம் பேசி விட்டு பாலக்காடு சாலையை கடப்பதற்காக சாலையின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வேகனார் கார் ஒன்று வேகமாக வந்தது அதற்கு முன்பாக லாரி ஒன்று சென்றுகொண்டிருந்தது அதனை ஓவர் டேக் செய்வதற்காக மேற்படி காரானது சாலையின் கரையில் நின்று கொண்டிருந்த மேற்படி பழனிச்சாமி மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியது ஆஜர் எதிரி தான் மேற்படி நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர்ஆவார்.

மேற்படி விபத்தினார் பழனிச்சாமி தூக்கி வீசப்பட்டு அதில் அவரது பின் மண்டை மற்றும் இடது புற கை . கால்கள் ஆகியவற்றிலும் காயம் ஏற்பட்டது.. பின்னர் நான் 108 அவசர ஊர்த்திக்கு தகவல் சொல்லிவிட்டு அசா 1 க்கும் தகவல் சொன்னேன். பின்னர் காயம்பட்டநபரை 108 அவசர ஊர்தி மூலமாக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அவரது மகன் அசா 1 கொண்டு சென்றார்- விபத்தை ஏற்படுத்திய வேகனார் வாகனத்தின் பதிவு எண் KL 09 T 2986 ஆகும். பின்னர் நானும், நமசிவாயமும,காளிமுத்துவும் சம்பவ இடத்தில் இருந்து சென்றுவிட்டோம் சம்பவ இடத்தில் வேறு பல நபர்கள்இருந்தார்கள். பின்னர் மறுநாள் காலை மேற்படி பழனிச்சாமி இறந்துவிட்டதாக தகவல் வந்தது. நாங்கள் கோவை CMGH மருத்துவமனைக்கு சென்றோம் போலிசார் அங்கும் வைத்து விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா 1 எனது நண்பர் என்றால் சரியல்ல ஆனார் ஒரே ஊர்க்காரர். எனக்கு அசா 1 ன் அலைபேசி எண் தெரியும். அசா 1 எனது நெருங்கிய நண்பர் என்றால்சரியல்ல. நான் நாயக்கர் சமுதாயத்தை சேர்ந்தவர். நான் பேப்பர் மில்லுக்கு ரா மெட்டீரியல் அனுப்பி வைக்கிறேன் எப்போதாவது ஆள் இல்லை என்றால் அசா 1வண்டி ஓட்டி வருவார்.

நான் நமசிவாயம், காளிமுத்துஆகியோர் ஒன்றாக நின்று கொண்டிருந்தோம் பழனிச்சாமி சாலையின் தென்புறமாக நின்று கொண்டிருந்தார். அசா 1 வந்து பார்த்தபோது வடபுறம் உள்ள கிரீன் மெடிக்கல் அருகில் வேகனார் கார் நின்று கொண்டிருந்தது என்றால் சரியல்ல வண்டி வலது புறம் ஓவர் டேக் செய்து வந்துதான் விபத்தினை ஏற்படுத்தியது

அதனால் கிரின் மெடிக்கல் அருகில் நிற்க வாய்ப்பில்லை.

விபத்தில் இறந்த நபர் வயதானவர் என்பதாலும் அவருக்கு கண்பார்வை சரியாக தெரியாத காரணத்தால் தானே சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல பழனிச்சாமி சாலையை கடப்பதற்காக சாலையின்மண் தரையில் தான்நின்று கொண்டிருந்தார். சம்பவம் தார் ரோட்டில் தான் நடந்தது என்றால் சரியல்ல பழனிச்சாமி மண் சாலையில் ஓரமாக நின்று கொண்டிருந்தார் அப்போதுதான் விபத்து ஏற்பட்டது காளிமுத்து, நமசிவாயம் எனது ஊர்தான் என்றால் சரிதான் சம்பவ இடத்தின் இருபுறமும் கடைகள் உள்ளது என்றால் சரிதான் அங்கு மக்கள் கூட்டம் இருக்கும் என்றால் சம்பவ சமயத்தில் இல்லை,

கடைக்காரர்கள் கடையில்இருந்தார்கள் என்றால் சரிதான் அவர்களுக்கு சம்பவம் குறித்து தெரியும் என்றால் சரிதான். நான் மறுநாள் மருத்துவமனையில் இருக்கும் போது போலிசார் என்னை சம்பவம் குறித்து கேட்டார்கள் நான்கூறினேன். போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

நான்கூறுவது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அசா 1 எனக்குவேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஓவர் டேக் செய்யப்பட்ட லாரியின் பதிவு எண் எனக்கு நினைவு இல்லை., அவ்வாறு லாரி எதுவும் வரவில்லைஎன்றாலும் எதிரே கேரளா பேருந்து தான் வந்தது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B.A.,,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 321/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW 3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | காளிமுத்து |
| Father's Name | – | ஆறுமுகம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 3rd May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மண்ணூரில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 02.03.2019 ம் தேதி இரவு 07.45 மணியளவில் மண்ணூரில் கிருஷ்ணசாமி துணிக்கடை முன்பு நான் நின்றுகொண்டிருந்தேன். பாலக்காடு ரோட்டில் மேற்கிலிருந்து வந்த வேகனார் கார் லாரியை முந்திச் செல்ல முயன்ற போது வலது புறத்தில் இறந்த போன பழனிச்சாமி மீது கார் வேகமாக வந்து மோதி தூக்கி வீசியது அவருக்கு பின்தலைமற்றும் இடது கை கால்களில் காயம் ஏற்பட்டது.

அசா 2 வெங்கடேஸ் என்பவர் 108 அவசர ஊர்திக்கு தகவல் கூறினார். அவரது மகன் அசா 1க்கும் தகவல் கூறினார். அசா 1 அவரது தந்தையை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். மேற்படி விபத்தை ஏற்படுத்திய வேகனார்காரின் பதிவு எண் KL 09 T 2986 ஆகும்,அதனை ஓட்டிச் சென்றவர் ஆஜர் எதிரிதான் ஆவார்.

மறுநாள் மேற்படி பழனிச்சாமி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன் போலிசார் என்னைவிசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வாகனம் ஓட்டும் டிரைவர் என்றால் சரிதான். அசா 1 ம் டிரைவர் என்றால் சரிதான். நான் கவுண்டர் வகுப்பினை சார்ந்தவர். இறந்து போன பழனிச்சாமி என்ன வகுப்பினை சார்ந்தவர்என்றால் எனக்கு தெரியாது. இறந்த நபர்எனது உறவினர் என்றால் இல்லை, அசா 1 எனது நண்பர் என்றால் சரியல்ல தெரிந்த நபர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருபுறமும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். ஓவர் டேக் செய்த லாரியின் பதிவு எண் எனக்கு தெரியாது.உதயகுமார் வரும்போது கிரின் மெடிக்கல் முன்பு தான் இறந்த நபர் மற்றும் வேகனார் கார் இருந்தது என்றால் சரிதான்.

மறுநாள் காலையில் மருத்துவமனைக்கு நானும்உதயகுமார், நமசிவாயம்,வெங்கடேஸ் ஆகியோர் சென்றோம் என்றால் சரிதான். போலிசார்அங்கு வைத்து எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். போலிசார் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் அது குறித்து எனக்குநினைவு இல்லை.,

சம்பவ இடத்தில் போலிசார் சென்று யாரை விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. விபத்தில் இறந்த நபர் வயதானவர் என்பதாலும் அவருக்கு கண்பார்வை சரியாக தெரியாத காரணத்தால் தானே சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல .

எதிரி வாகனத்தை மெதுவாகவும் கவனமாகவும் சாலையின் இடதுபுறமாக ஓட்டிவந்தார் என்றாலும் எதிரியின் மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல. நானும் அசா 1 அசா 2 ஆகியோர் ஒரே ஊர்க்காரர் என்பதாலும் அசா 1 ன் நண்பர் என்பதாலும் அவருக்குஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B.A.,,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.